**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – பள்ளிக் கல்வி – கருணை அடிப்படை பணி நியமனம் – பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு.D.ரவி என்பவரின் மகன் திரு.R.ராகுல், இளநிலை உதவியாளராக பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வித்[ப.க.3(2)] துறை**

**அரசாணை (ப) எண்.** 181

**நாள்** 24.11.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054
**சோபகிருது,** கார்த்திகை 8
**படிக்கப்பட்டவை:-**

1. அரசாணை(நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் ந.க.எண்.050543 /ஜே/இ1/2023, நாள் 07.09.2023.

********

**ஆணை:-**

இராணிப்பேட்டை மாவட்டம், குருவராஜப்பேட்டை, அரசு மேல்நிலைப்பள்ளியில், பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரியும் போது திரு.D.ரவி என்பார், பணிக்காலத்தில் 01.11.2015 அன்று காலமானார் என்றும், அன்னாரின் மனைவி அவரது மகன் திரு.R.ராகுல் என்பாருக்கு கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு 07.09.2018 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 16.08.1999 என்றும், அவர் இடைநிலைக் கல்வி (எஸ்.எஸ்.எல்.சி) பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், இவருக்குப் பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, திரு.R.ராகுல் என்பவர் இளநிலை உதவியாளராக 14.10.2022 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக் கல்வித் துறையில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார் என்றும், எனவே, அன்னாரின் பணியினை வரன்முறை செய்யுமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக்கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

Scanned with OKEN Scanner

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பள்ளிக்கல்வி இயக்குநரின் பரிந்துரையை, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசு நன்கு ஆய்வு செய்து, இராணிப்பேட்டை மாவட்டம், குருவராஜப்பேட்டை, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரியும்போது பணிக்காலத்தில் காலமான திரு.D.ரவி என்பவரின் வாரிசான அவரது மகன் திரு.R.ராகுல் என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக்கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் 14.10.2022 முற்பகல் முதல் பணிபுரியும், அவரது பணியினை வரன்முறைப்படுத்திட, அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அவர் பணியில் சேர்ந்த நாளான 14.10.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.குமரகுருபரன்
அரசு செயலாளர்

**பெறுநர்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.
முதன்மைக் கல்வி அலுவலர், இராணிப்பேட்டை மாவட்டம்.
தனியர் (பள்ளிக்கல்வி இயக்குநர் வழியாக)
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

Scanned with OKEN Scanner